# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் ஜெர்மனியிலுள்ள மான்ஹேம் மாநாட்டுத் திடலில் 22.08.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள் :**

இன்று அல்லாஹ்வின் அருளால் இந்த ஜுமுஆ குத்பாவுடன் ஜெர்மனி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. இந்த வருடம் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி இறைவனுக்கு நன்றி செலுத்துவதுடன் பொதுவாக மிகுந்த கவனத்துடனும் சிறந்த ஏற்பாடுகளுடனும் இந்த மாநாடு நடக்கின்றது. எனவே, இந்த வருட ஆண்டு மாநாட்டில் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் மாநாட்டில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மாநாடு ஏற்பாடுகளிலும் விரிவான நிலை காணப்படுகிறது. கிலாஃபத் ஜுப்ளியையொட்டி நான் இந்த வருடம் உலகின் பல்வேறு நாடுகளில் நடக்கின்ற மாநாடுகளில் கலந்து கொண்டிருப்பதன் காரணமாக அமைப்பு ரீதியாக மாநாட்டு ஏற்பாடுகள் மிகுந்த விழிப்புணர்வுடனும் கவனத்துடனும் செய்யப்பட்டு வருகின்றது. அவ்வகையில் இங்கு ஜெர்மனியில் ஆண்டு மாநாடும் உலகின் ஏனைய நாடுகளில் நடைபெறும் ஆண்டு மாநாடுகளைவிட எவ்வகையிலும் குறைவானதல்ல. குறிப்பாக, இதுவரை நடைபெற்ற ஆண்டு மாநாடுகளில் கானாவில் நடைபெற்ற ஆண்டு மாநாடு குறிப்பாக மக்களது கவனத்தை தன் பக்கம் ஈர்த்துள்ளது. அல்லாஹ்வின் அருளால் இவ்வருடம் நான் கலந்து கொள்ளும் ஏழாவது ஆண்டு மாநாடாக ஜெர்மனியின் ஆண்டு மாநாடு இருக்கின்றது. ஜெர்மனியின் ஆண்டு மாநாடு ஒவ்வொரு வருடமும் அல்லாஹ்வின் அருளால் மிகவும் வெற்றிகரமாக நடக்கின்றது. இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் இந்த மாநாட்டின் ஆன்மாவை புரிந்து கொண்டால் அவரும் இந்த மாநாட்டிலிருந்து பலன் பெறுவதுடன் ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது மாநாட்டின் வெற்றிக்கும் அவர் ஒரு காரணமாக ஆகி விடுவார்.

இங்கு வந்துள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும், முதியவரும், இளைஞரும், சிறுவரும் எப்போதும் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், அவர்கள் நாம் இந்த மாநாட்டிற்கு வருகை தந்திருப்பதன் நோக்கம் என்ன? என்பதை புரிந்து செயல்பட வேண்டும். இந்த நோக்கம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கூறியுள்ளார்கள். தன்னிடம் பைஅத் செய்து இந்த ஜமாஅத்தில் இணைபவர்கள் இந்த ஜமாஅத்தில் பைஅத் செய்ததன் நோக்கம் என்ன? என்பதைப் பற்றி அவர்கள் நமக்கு கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்:**

“இந்த ஜமாஅத்தில் பைஅத் செய்து நுழைந்துள்ள எல்லா தூயவர்களுக்கும் நான் தெரிவிப்பது என்னவென்றால், அவர்கள் பைஅத் செய்திருப்பதன் நோக்கம் என்னவென்றால் அதன் மூலமாக உலகத்தின் மீதுள்ள நேசம் குளிர்ந்து விட வேண்டும். தனது கருணையுள்ள எஜமானர் மீதும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பு மிகைத்து விட வேண்டும். இதுவே எளியவனுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள விஷயமாகும்.”

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னிடம் பைஅத் செய்தவர்கள் பற்றி **முஹ்லிஸீன்** என்ற அன்பான சொல்லை பயன்படுத்தியுள்ளார்கள். ‘களங்கமற்ற நிலையில் அன்பு கொள்பவர்கள்’ என்று இதற்கு பொருள். அந்த அன்பில் எந்த கறையும், மாசும் தென்படாது. எவ்வித சுய நலனுமில்லாத, சுய இலாபமில்லாத நட்பாக அவர்களது நட்பு இருக்கும். எந்த பெயரையும் புகழையும் எதிர்பார்க்காமல் களங்கமற்ற தூய தொடர்பாக அது இருக்கும். நம்பிக்கைக்குப் பாத்திரமாக உறவு இருக்கும்.

தயிர் கலையத்திலிருந்து பிரித்தெடுக்கப்படும் வெண்ணெய்க்கும் **‘இக்லாஸ்’** என்று கூறப்படுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ள அல்லது நம்மிடம் எதிர்பார்க்கின்ற இந்த தகுதியை நாம் பெற வேண்டும். அந்த தகுதியைப் பெற நாம் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்

**முஹ்லிஸீன்**(தூயவர்)களின் சிறப்புகளை எடுத்துக் கூறியுள்ளான். அவை ஒவ்வொரு நொடியிலும் நமது கண் முன்னாலேயே நம்மிடம் உருவாகி விட்டால், நிச்சயமாக எவர்கள் மீது உலகத்தின் நேசம் குளிர்ந்து விட்டதோ அந்த நன்மக்களைச் சார்ந்தவர்களாக ஆகி விடுவோம். அவர்களது உள்ளங்களில் எவர் மீதாவது அன்பு நிலைகொள்கின்றதென்றால் அது அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பாகத்தான் இருக்க முடியும்.

ஹஸ்ரத் யூசுப் (அலை) அவர்களை ஒரு பெண் தீமையின் பக்கம் அழைத்த போது அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தாலும் அவனைப் பற்றிய உண்மையான அறிவும், ஞானமும் இருந்ததன் காரணமாக ஹஸ்ரத் யூசுப் (அலை) அவர்கள் அந்த தீமையிலிருந்தும் தப்பித்துக் கொண்டது பற்றி குறிப்பிடும்போது அல்லாஹ் திருக்குர்ஆனில் அவர்களைப் பற்றி **இன்னஹூ மின் இபாதினல் முஹ்லஸீன்** - நிச்சயமாக அவர் தூய்மையான தேர்ந்தெடுக்கப்பட்ட நமது அடியார்களைக் சார்ந்தவராக இருந்தார் (12:25) என்று கூறியுள்ளான்.

இந்த தூய்மைதான் ஹஸ்ரத் யூசுப் (அலை) அவர்களைக் காப்பாற்றியது. ஒரு மனிதன் உண்மையான முறையில் தனது உள்ளத்தில் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தைக் கொண்டவனாக இருந்தால் அந்த அச்சமும், தூய்மையும்தான் எல்லா தீமைகளிலிருந்தும் அவனைக் காப்பாற்றக்கூடியதாக இருக்கின்றது.

-ய்த்தான் இறைவனிடம் நான் உனது அடியார்களை நிச்சயமாக வழிகேட்டில் கொண்டு செல்வேன். அவர்களுக்கு உலகத்தின் ஒளியையும், அகங்காரத்தையும், பொலிவையும் எவ்விதத்தில் காட்டுவேன் என்றால், அவர்களில் பெரும்பாலார் நிச்சயமாக என்னைப் பின்பற்றியவாறு எனக்குப் பின்னால் வருவார்கள். அவர்கள் உன்னை மறந்து விடுவார்கள் என்று கூறியதாக நாம் பார்க்கின்றோம். ஒரு இடத்தில் -ய்த்தான் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டவாறு **இல்லா இபாதக மின்ஹுமுல் முஹ்லிஸீன்** - உனது தூய அடியார்களைத் தவிர (மற்றவர்களைத்தான் என்னால் வழிகெடுக்க முடியும்) என்று அறிவிப்பு செய்ததாக நாம் திருக்குர்ஆனில் பார்க்கின்றோம். அந்த தூய அடியார்களுக்கு அல்லாஹ்வின் மீதும் அவனது திருத்தூதர் மீதும் அளவு கடந்த அன்பு இருந்தது. இந்த காலத்தில் இப்படிப்பட்ட தூய அடியார்களுக்கு அல்லாஹ்வின் மீதும் அவனது தூதராகிய ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதும் அளவு கடந்த அன்பு இருக்கின்றது. எவர்களுக்கு அல்லாஹ்வின் மீதும், அவனது தூதர் மீதும் கலப்பற்ற தூய்மையான முழுமையான அன்பு இருக்கின்றதோ அவர்கள் எனது பிடியில் வரமாட்டார்கள் என்றே -ய்த்தான் அறிவித்துள்ளான். காலத்தின் இமாமிடம் அவர்கள் செய்துள்ள பைஅத் உடன்படிக்கையானது, நாம் எப்போதும் செயல்படுத்த முயற்சி செய்கின்ற அந்த பைஅத்தின் நிபந்தனைகளை கண்முன் நிறுத்தி செய்யப்படும் களங்கமற்ற பைஅத் உடன்படிக்கையாக அது இருக்கும். இப்படிப்பட்டவர்கள் எனது பிடியில் வர முடியாது என்றே -ய்த்தான் கூறினான். அவர்களுக்கு நான் எந்த அளவு உலகத்தின் பிரகாசத்தையும், பொலிவையும் காட்டினாலும் அவர்கள் எனது பிடியிலிருந்து வெளியேறி விடுவார்கள் என்றே -ய்த்தான் கூறியுள்ளான். திருக்குர்ஆனில் ஓரிடத்தில் நிராகரிப்பவர்கள் ஒரு கவிஞராகிய பைத்தியக்காரர் கூறுவதைக் கேட்டு நாங்கள் வணங்குகின்றவற்றை நாங்கள் கைவிட்டு விட முடியுமா? என்று கேட்டதற்கு அல்லாஹ் நிச்சயமாக முஹம்மத் (ஸல்) உண்மையான தூதராவார் என்று பதில் கூறுகின்றார். அவர்கள் உண்மையான தூதர் மட்டும் அல்ல. மாறாக அவர்கள் மூலம்தான் அவர்களுக்கு முன்னர் தோன்றிய நபிமார்களின் உண்மையும் இன்று தெளிவாக நிரூபிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உலகில் தோன்றாமல் இருந்திருந்தால் அவர்களுக்கு முன்னர் தோன்றிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிமார்களின் உண்மை பற்றியும் நமக்கு எந்த தெளிவும் கிடைத்திருக்காது என்ற கூறியுள்ளார்கள். ஏனென்றால், இதற்கு முன்னுள்ள தூதர்களை ஏற்றுக் கொண்டவர்கள் அவர்களை பற்றிய வியக்கத்தக்க கற்பனையான விஷயங்களை கூறியிருந்தார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: இந்த உண்மையான மகத்தான தூதரை மறுப்பவர்களே! கேளுங்கள். நிச்சயமாக நீங்கள் நரகத்தின் தண்டனையை சுவைப்பீர்கள். எவர்கள் களங்கமற்ற தூய்மையான

உள்ளத்துடன் இந்த தூதர் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்வார்களோ அவர்களே இரட்சிப்பிற்குரியவர்களாவர். பிறகு அல்லாஹ் இதற்கு முன்னுள்ள சமுதாயங்களில் தோன்றிய தூதர்கள் பற்றி குறிப்பிட்டு விட்டு அந்த சமுதாயங்கள் அத்தூதர்களை ஏற்காமல் வழிகேட்டில் சென்றதன் காரணமாக இந்த உலகிலும் நாம் அவர்களை தண்டனையை சுவைக்கும்படி செய்தோம். ஆனால், அவர்களில் சிலர் **இபாதல்லாஹில் முஸ்லிஹீன்** - அல்லாஹ்வின் களங்கமற்ற தூய அடியார்களாக இருந்தார்கள். அவர்கள் அத்தண்டனைக்கு இரையாக வில்லை என்று கூறுகின்றான்.

இந்த உதாரணத்தை எடுத்துக் கூறி அல்லாஹ் இன்று முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் திருக்குர்ஆன் நிரந்தரமாக செயல்படக்கூடிய ஒரு ஷரீஅத்தாகவும், எப்போதும் நிலைத்திருக்கும் ஷரீஅத்தாகவும், போதனையாகவும் திருக்குர்ஆன் இருக்கின்றது என்பதை எடுத்துக்கூறி நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் அவர்களது உண்மை பேரன்பராகத் திகழும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களையும் மறுத்து விட்டு நீங்கள் இறைதண்டனையிலிருந்து தப்பிவிட முடியுமா? என்று அவர்களிடம் கேட்கின்றான். ஒருபோதும் அவர்களால் இதிலிருந்து தப்ப முடியாது.

நமக்கு இந்த காலத்தின் இமாமை ஏற்றுக்கொள்ளக்கூடிய நற்பாக்கியத்தை வழங்கி தனது அருட்கொடையை நமக்கு வழங்கியிருப்பதும் கூட அல்லாஹ் அஹ்மதிகளாகிய நம்மீது செய்துள்ள மாபெரும் அருளாகும். இந்த அருட்கொடைக்கு கண்ணியமளிப்பது நம்மீது கடமையாகும்.

பிறகு அல்லாஹ் தனது பெருமையை எடுத்துரைத்தவாறு அல்லாஹ்வை மறுப்பவர்கள் அவன் மீது சுமத்துகின்ற ஒவ்வொரு குறையிலிருந்தும் தூயவனாக இருக்கின்றான் என்று கூறியுள்ளான். இவ்வாறு குறை கூறுபவர்களுக்கு தோல்வி மற்றும் நரகத்தைத் தவிர வேறு எதுவும் கிடைக்காது. அல்லாஹ்வை தூய்மையான உள்ளத்துடன் வணங்குபவர்கள்தான் வெற்றி பெறுவார்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இறைத்தன்மையையும் இறைவனது இருப்பையும் மறுக்கின்ற பலரும் இந்த ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருகின்றார்கள். அல்லாஹ் இருக்கின்றானா? இல்லையா? என்பதைப் பற்றி பல்வேறு கருத்துக்களும், சர்ச்சைகளும் எழுகின்றன. இப்படிப்பட்ட கருத்துடைய எல்லோரது முடிவும் தீயதாகத்தான் இருக்கும் என்பதை அல்லாஹ் கூறி விட்டான். இவர்களுக்கு இறைவன் மீது நம்பிக்கையில்லை. ஆனால், இறைவனின் கலப்பற்ற தூய அடியார்களுக்குத்தான் வெற்றி கிடைக்கும். எனவே, நீங்கள் எப்போதும் இறைவனை நினைவில் வைக்க வேண்டும்.

ஏதாவது துன்பங்களில் சிக்கிக்கொள்ளும் போது அல்லது நம்முடைய ஏதாவது குறிக்கோள் நிறைவேற வேண்டும் என்கின்றபோது மட்டும் நாம் அவனை அழைப்பவர்களாக இருக்கக் கூடாது. பொதுவான நிலைமையில் நாம் இறைவனை மறந்து விடுபவர்களாக ஆகி விடக்கூடாது. அஹ்மதிகளாகிய நம்மீது அல்லாஹ் எந்த அளவு அருட்கொடைகளை இறக்கியுள்ளான் என்றால் அந்த அருட்கொடைகள் நம்மிடம் எதிர்பார்ப்பது ஒவ்வொரு நொடியும் நாம் இறைவனை நினைவு கூர்பவர்களாக இருக்க வேண்டும் என்பதேயாகும். எந்த இடங்களில் அல்லாஹ்வைப் பற்றியும் அவனது சிறப்புகள் பற்றியும் நாம் கூற வேண்டியதுள்ளதோ அங்கு இறைவனைப் பற்றியும் அவனது இருப்பைப் பற்றியும் எடுத்துக்கூறி அவற்றை நிரூபிப்பதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் உடனடியாக தயாராக இருக்க வேண்டும்.

எனது ஜமாஅத்தில் இணைந்துள்ள தூயவர்களிடம் எல்லா விதமான நேசத்தை விடவும் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள நேசம் மிகைத்து நிற்கும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதிலிருந்தும் அவர்கள் நாம் எல்லா விதமான உலக தீமைகளிலிருந்தும் நம்மை பாதுகாத்துக் கொள்வதன் பக்கம் நமக்கு கவனமூட்டியிருக்கின்றார்கள். ஒவ்வொரு நேரமும் உங்களுக்கு இதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். எவ்வகையிலான தீமையும் நம்மிடம் உருவாகி விடக் கூடாது.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ் இவ்வாறு அறிவிப்பு செய்யும்படி கூறுகின்றான்:**

நீர் கூறுவீராக! (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். அப்போதுதான் அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். (3:32)

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதுள்ள நேசம் அல்லாஹ்வின் நேசத்திற்குரிய வழியாக இருக்கின்றது. மேலும், பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும் எதிர்காலத்தில் பாவங்களிலிருந்து தப்பிப்பதற்குமுரிய ஒரு வழியாகவும் அது இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆண்டு மாநாடுகளை துவக்குவதற்கு முன்னதாக தூய்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் அன்பு கொள்பவர்கள் ஒன்றுகூடவே இம்மாநாட்டை ஏற்பாடு செய்திருப்பதாக கூறியுள்ளார்கள்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதற்காக வருடத்தில் மூன்று நாட்கள் மக்கள் ஒன்றுகூட வேண்டும். அல்லாஹ்வுக்காக மட்டும் இறைவனுடன் தொடர்புள்ள விஷயங்களை கேட்பதற்கும் துஆவில் கலந்து கொள்வதற்கும் அவர்கள் இங்கு வர வேண்டும்.

இந்த மாநாட்டிற்கு நீங்கள் வருகை தருவது எந்த உலக நோக்கத்திற்காகவும் அல்ல. மாறாக, முழுக்க முழுக்க அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் உள்ள அன்பில் நீங்கள் இங்கு வருகின்றீர்கள்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிரிதோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் உள்ள அன்பின் காரணமாக அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதன் பக்கம் உங்களுக்கு கவனம் ஏற்படவில்லையென்றால் பிறகு இந்த அன்பு தூய்மையான அன்பு அல்ல.

இந்த அன்பு கலப்பற்ற தூய்மையான அன்பு அல்ல என்றால், அப்படிப்பட்டவர்கள் தூய இறையடியார்களாக இருக்க முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உண்மையான உள்ளத்துடன் எல்லா இறைகட்டளைகளையும் தங்களது தலை மேல் சுமக்காதவர்களுடன் எனக்கு என்ன தொடர்பு இருக்க முடியும்? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் உண்மையான உள்ளத்துடன் தங்களது கருத்துக்களை பலியிடத் தயாராக இல்லாதவர்களுடன் எனக்கு என்ன தேவை? எவர்கள் நேர்மையை கடைபிடிக்காமலும் குழப்பம் நிறைந்த பழக்கவழக்கங்களை கைவிடாமலும் இருக்கின்றார்களோ, பரிகாசம் செய்கின்ற சபைகளை விட்டும் அகலாமல் இருக்கின்றார்களோ, தூய்மையற்ற சிந்தனைகளை விட்டுவிடாமல் இருக்கின்றார்களோ, மனிதத்தன்மை, நாகரிகம், பொறுமை, மென்மை ஆகியவற்றின் ஆடையை அணியாமல் இருக்கின்றார்களோ, அவர்களும் ஏழைகளுக்கு தொல்லை கொடுப்பவர்களும் எளியவர்களை விரட்டுபவர்களும் இறுமாப்புடன் பஜாரில் செல்பவர்களும், தற்பெருமையுடன் நாற்காலியில் அமர்பவர்களும், தன்னை பெரிதாக கருதுபவர்களும் ஆகிய இவர்களுடன் எனக்கு என்ன தொடர்பு இருக்க முடியும்?

தன்னை எல்லாரையும் விட இழிவானவர்களாகவும் சிறியவர்களாகவும் கருதுபவர்களே அருளுக்குரியவர்கள். அவர்கள் வெட்கத்துடன் பேசுகின்றவர்களாக இருப்பார்கள். எளியவர்களுடன் கண்ணியத்துடன் நடந்து கொள்வார்கள். தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடனும் தற்பெருமையுடனும் ஒருபோதும் அவர்கள் யாரையும் பரிகாசம் செய்யமாட்டார்கள். தனது கருணையுள்ள இறைவனை அவர்கள் நினைவு கூர்வார்கள்.

இப்படிப்பட்ட மக்களுக்காக இரட்சிப்பு தயாராக இருக்கின்றது என்று நான் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன். உள்ளத்தில் உருக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய போதனைகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள். இந்த போதனையில் குறிபிடப்பட்டுள்ள விஷயங்களைப் பின்பற்றி நடந்தால்தான் இறைவன் மீதும் அவனது தூதர் மீதும் அன்பு கொண்டுள்ள தூய நல்லடியார்களில் நாமும் நம்மை இணைத்துக் கொள்ள முடியும். இந்த மக்கள்தான் இந்த மாநாட்டிற்காக அவர்கள் வந்த நோக்கத்தை நிறைவு செய்பவர்களாக இருக்கின்றார்கள்.

அவ்வாறில்லையென்றால் இது ஒரு உலக திருவிழாக்கள் போன்ற ஒரு திருவிழா அல்ல என்பதை மாநாடு தொடர்பாக கூறும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிக தெளிவாகவே கூறி விட்டார்கள். இன்று கிலாஃபத் ஜுப்ளி மாநாடு நடைபெறுவதையொட்டி நீங்கள் இங்கு ஒன்றுகூடியுள்ளீர்கள். இதற்கு ஒரு குறிப்பான முக்கியத்துவம் இருக்கின்றது. இது அல்லாஹ்வின் அருளை நினைவூட்டுகின்ற மாநாடாகும். நம்மிடத்தில் தூய்மையான மாறுதலை நாம் ஏற்படுத்தும்போதுதான் நாம் உண்மையிலேயே இந்த இறை அருளுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருப்போம். இறைவனது அன்பை பெறுவதற்காக நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு களத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு உயர்வான முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள். இந்த நற்செயல்களை நீங்கள் செய்தால் அல்லாஹ்வின் அன்பு உங்கள் உள்ளங்களில் நிலைபெற்று விடும் என்று அவர்கள் போதித்துள்ளார்கள்.

திருக்குர்ஆனிலுள்ள எல்லா கட்டளைகளுக்கும் ஏற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி இருந்திருக்கின்றது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தை பற்றி கூறுங்கள் என்று கேட்டதற்கு நீங்கள் திருக்குர்ஆனை படிக்கவில்லையா? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு காரணம் திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையையும் முதலில் அவர்கள் செயல்படுத்திக் காட்டினார்கள். பிறகு தமது உம்மத்திற்கு அது பற்றி போதித்தார்கள். ஏற்கனவே நான் கூறியது போன்று நீங்கள் அல்லாஹ்வின் மீது அன்பு வைத்திருப்பதாக வாதிக்கின்றீர்கள் என்றால் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் நீங்கள் எத்தகு அன்பு செலுத்த வேண்டும் என்றால் அவர்களது ஒவ்வொரு கட்டளைக்கும் ஒவ்வொரு போதனைக்கும் ஏற்ப செயல்பட வேண்டும் என்றுதான் இறைவன் அறிவித்துள்ளான். மேலும் உங்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் ஓதியவாறு என்னிடம் வாருங்கள் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான். ஆனால், அவ்வாறு தரூது ஓதும்போது அது உண்மையான பேரன்புடன் பிணைக்கப்பட்டு இருக்க வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்.

நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் இந்த நபி மீது தரூது அனுப்புகின்றார்கள். நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் அவர் மீது தரூது அனுப்புங்கள். மிகுந்த மனத்தூய்மையுடனும் அன்புடனும் அவர்கள் மீது ஸலாம் கூறுங்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறே இந்த வசனத்திற்கு பொருள் கொடுத்துள்ளார்கள்.

இத்தகைய மனத்தூய்மையுடனும் மிகுந்த அன்புடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நாம் ஓதுகின்ற தரூதும் ஸலாமும்தான் இறைநெருக்கத்தை நமக்கு வழங்கும். இதன் மூலமாகவே துஆ ஏற்றுக்கொள்ளப்படுகின்ற காட்சியையும் ஒரு மூஃமின் பார்க்கின்றார்.

எனவே, இந்த மாநாட்டு நாட்களில் தொழுகை மற்றும் துஆக்களில் நாம் கவனம் செலுத்துவதுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கலப்பற்ற தூய்மையான உள்ளத்துடன் உளப்பூர்வமாக தரூது ஓதிக் கொண்டிருங்கள். அதன் மூலம் அல்லாஹ் நமது துஆக்களை ஏற்றுக்கொண்டவாறு நமது நிலைமைகளை மாற்றுவானாக. அவனது தூய நல்லடியார்களில் ஒருவனாக நம்மை அவன் ஆக்குவானாக.

இறைவனது முழுமையான அடிமையாக இருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவணக்கத்தில் எத்தகு உயரிய முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளர்கள் என்றால் அதற்கு ஈடான

உதாரணத்தை எங்கும் நம்மால் பார்க்க முடியாது. உலகமும் அதில் உள்ளவற்றையும் பற்றிய எந்தக் கவலையுமில்லாமல் சில நேரங்களில் மக்கள் குடிபெயராத இடங்களில் அவர்கள் இறைவனை வணங்குவதில் ஈடுபட்டிருந்தார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மனைவி தனக்கருகில் படுக்கையில் படுத்திருந்த அவர்களை காணாமல் அவர்கள் வேறு ஏதாவது மனைவியின் வீட்டிற்கு சென்றிருப்பார்களோ என்று சந்தேகப்பட்டு அவர்களைத் தேடிய போது, அவர்கள் இருந்த அந்த காட்சியைக் கண்டு அவர்களது மனைவிக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. உலகம் எண்ணுவது போன்று நான் உங்களைப் பற்றி என்ன நினைத்து விட்டேன்? உங்களது உயர்வான தகுதியை நான் புரியாமல் போய் விட்டேனே என்று எண்ணி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மனைவி வருந்தினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ தனது இறைவன் முன்னால் சஜ்தாவில் வீழ்ந்து கிடந்தார்கள். அவர்கள் எந்த அளவுக்கு இறைவன் முன்னால் மன்றாடினார்கள் என்றால் அதற்கு ஈடான ஓர் உதாரணத்தை நம்மால் கூற முடியாது. இவ்வாறு தனது எஜமானனை வணங்கிய நிலையில் அவர்களது மன்றாடும் நிலையை கொதிக்கின்ற கடாரத்தின் ஓசைக்கு ஒப்பிட்டு ஒருவர் கூறினால் இன்னொரு நபர் வேறு ஒரு உதாரணத்தை கூறுகின்றார். ஆனால், இறைவனின் இந்த முழுமையான அடிமை தனது எஜமானனுக்கு முன்னால் அவனை வணங்கிய நிலையில் அவனிடம் மன்றாடும் அந்த நிலை எல்லா உதாரணங்களையும் மிஞ்சி மிக உயர்வான நிலையில் இருக்கின்றது. கடுமையாக நோய்வாய்ப்பட்ட சமயத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜமாஅத்தாக தொழுவதை விட்டுவிடவில்லை. அவர்களது இறுதி நாட்களில் நோயின் காரணமாக மிகவும் பலவீனமான நிலையிலும்கூட அவர்கள் பள்ளிவாசலுக்கு வந்தார்கள். தனக்கு முன்னால் தன்னை ஏற்றுக்கொண்ட முஸ்லிம்கள் தொழுகையை நிறைவேற்றுவதைப் பார்த்து அவர்கள் புன்னகை பூத்தார்கள். இதுதான் மனிதன் படைக்கப்பட்டதன் உண்மையான நோக்கமாகும். இதனை இந்த ரஹ்மானின் அடியார்களாகிய இந்த தூயவர்கள் நிறைவேற்றுகின்றனர் என்ற மகிழ்ச்சி அவர்களுக்கு இருந்தது. எனது கண்களுக்கு குளிர்ச்சி தொழுகையில் இருக்கின்றது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். தொழுகையை முன்பாக பேணுவது தொடர்பாக இந்த உயர்வான முன்மாதிரியைத்தான் அவர்கள் நமக்கு நிலைநாட்டிக் காட்டியுள்ளார்கள். நஃபிலான இறைவணக்கங்களைப் பேணுவதிலும் உயர்வான முன்மாதிரியை அன்னார் நிலைநாட்டினார்கள். அவர்களுக்கு இறைவணக்கத்தின் மூலம் கிடைத்த உயர் தகுதி எல்லாருக்கும் கிடைக்காது. அந்த உயர்வான தகுதிவரை முழுமை பெற்ற மனிதராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மட்டும்தான் செல்ல முடிந்தது. அதனாலேயே அல்லாஹ்வும் அவனது அனைத்து மலக்குகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது அனுப்புகின்றார்கள். மேலும் இறைவன் **லகத் கான லகும் ஃபி ரஸூலுல்லாஹி உஸ்வதும் ஹஸனா** - நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் ஒரு அழகிய முன்மாதிரி இருக்கின்றது என்று கூறியதன் மூலம் அல்லாஹ்வை நினைவு கூர்பவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரியைப் பின்பற்றிச் செல்வது அவசியமானதாகும் எனத் தெரிகிறது.

எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் தனக்குள்ள முழுமையான ஆற்றலுக்கு ஏற்ப தங்களது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்த வேண்டும். அதன் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நேசம் வைத்திருப்பதாக செய்யப்படும் வாதம் உண்மையானதாக ஆகி விடும். அது வெறும் வாதமாக மட்டும் இருக்கக்கூடாது. எனவே, இந்த நாட்களில் இறைவணக்கத்தின் பக்கமும் தொழுகைகளின் பக்கமும் கவனம் செலுத்துங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் அல்லாதவற்றின் பக்கம் குனிவது இறைவனிடமிருந்து தன்னை துண்டித்துக் கொள்வதாகும் என்பதை நன்றாக நினைவில் வையுங்கள். ஏகத்துவத்தை செயல் அளவில் நிறைவேற்றிக் காட்டுவதே தொழுகையாகும். தாழ்மையும், தன்னை அற்பமாக கருதும் நிலையும், தான் ஒன்றுமற்றவன் என்று தன்னைப் பற்றி கருதும் ஆன்மா ஒருவரிடம் இல்லாத வரை தொழுகை பொருளற்றதாகவும், பயனற்றதாகவும் ஆகி விடும். கேளுங்கள். எந்த துஆ தொடர்பாக **உத்ஊனி அஸ்தஜிப் லகும்** - என்னை

அழையுங்கள். நான் உங்களுக்கு பதில் கொடுப்பேன் என்று இறைவன் கூறியுள்ளானோ அந்த துஆவை பெறுவதற்கு இந்த உண்மையான ஆன்மா தேவைப்படுகிறது. இறைவனை வணங்கும்போது இருக்கும் உருக்கத்திலும் மன்றாடுதலிலும் இந்த உண்மையான ஆன்மா இல்லையென்றால் அது ஒரு பொருளற்ற ஓசையாகத்தான் இருக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எதுவரை தூய்மையற்ற அழுக்கு நிறைந்த திட்டங்களை நாம் எரித்து விட்டு, தான் என்ற அகந்தையையும், தற்பெருமையையும் விட்டு விலகி, நான் ஒன்றுமற்றவன் என்ற சிந்தனையும், தாழ்மையும் ஒருவரிடம் வருவதில்லையோ அதுவரை அவர் இறைவனின் உண்மையான அடியாராக ஆக முடியாது என்பது அடிப்படை விஷயமாகும்.

இறைவனின் முழுமையான அடிமையாக ஆகுவதற்கான வழியைக் கற்றுத் தருகின்ற சிறந்த ஆசிரியனும், அதற்குரிய மிகச் சிறந்த வழியும் தொழுகையேயாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"நான் மீண்டும் உங்களிடம் கூறுகின்றேன். இறைவனிடத்தில் உண்மையான தொடர்பையும் உண்மையான உறவையும் நிலைநாட்ட விரும்பினால் நீங்கள் தொழுகையை கடைபிடியுங்கள். அத்தொழுகையில் உங்கள் உடல் மட்டுமல்லாமல், உங்களது வெளிப்படையான தொழுகை மட்டுமல்லாமல், உங்களது ஆன்மாவின் உணர்வுகளும் நாட்டங்களும்கூட தொழுகையாக ஆகிவிட வேண்டும்."

இப்படிப்பட்ட ஆன்மாவைத்தான் தமது ஜமாஅத்திலுள்ளவர்களிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்க விரும்பினார்கள். எதுவரை உள்ளம் எல்லா விதமான மறைவான ஷிர்க்கிலிருந்தும் தூய்மையடையவில்லையோ அதுவரை தொழுவது, ஏகத்துவத்தை பறைசாற்றுவது, லா இலாஹ இல்லல்லாஹ் என்ற அறிவிப்பை செய்வது ஆகியவை நோக்கமில்லாத செயலாகி விடும். எதுவரை அளவு கடந்த பணிவும், தாழ்மையும் நம்மிடம் இருக்காதோ அதுவரை இந்த எல்லா செயல்களும் குறிக்கோளற்றவதாகத்தான் இருக்கும். ஆனால் இந்த நிலையை நாம் நம்மிடம் உருவாக்கி விட்டால் பிறகு நமது துஆக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏனென்றால் இந்த அடிப்படை விஷயங்களைத்தான் அல்லாஹ் நிலைநாட்ட விரும்புகின்றான். அவற்றை நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம் முன்னால் உயர்வான முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள். அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு விளக்கிக் கூறியுள்ளார்கள். இந்த பணிவும், தாழ்மைக் குணமும் எவ்வகையில் இருக்க வேண்டும்? என்பதையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு விளக்கி கூறி விட்டார்கள். இறைவனது அடியார்களிடத்தில் பணிவுடனும், தாழ்மையுடனும் நடப்பதன் மூலமாகவே துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை அவர்கள் நமக்கு சுட்டிக்காட்டியுள்ளார்கள். அப்போதுதான் நமது தொழுகைகளும் உண்மையான தொழுகைகளாக இருக்க முடியும். அல்லாஹ்வின் உண்மையான ஏகத்துவத்தை பறைசாற்றுபவர்கள் தங்களது சுய நோக்கத்திற்காக உலகை மட்டும் சார்ந்திருப்பவர்களாக இருக்க முடியாது. மற்றவர்களது உரிமைகளை பறிப்பவர்களாக அவர்கள் இருக்கமாட்டார்கள். அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமையை செலுத்துபவர்கள் அவனை உண்மையான முறையில் வணங்குபவர்களாக இருக்க முடியும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

படைப்பினங்களுக்குரிய உரிமையை செலுத்துவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்தகைய முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள் என்பதற்கு சில உதாரணங்களை நான் தருகின்றேன்.

ஒரு ஏழைப் பெண் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வழியில் தடுத்து நிறுத்துகின்றார். அவர் கூறுவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழுமையாக கவனத்துடன் கேட்கின்றார்கள். கவலைப்பட வேண்டாம். நீங்கள் கூறுவதை முழுமையாக கேட்டு விட்டுதான் நான் செல்வேன் என்று அவர்கள்

கூறினார்கள். இதுதான் அவர்கள் காட்டிய பணிவாகும். அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது அனுப்புகின்றார்கள் என்று அல்லாஹ் கூறியிருந்தும் நீங்கள் பைஅத் செய்வதற்காக தூதரின் கைகளின் மேல் கை வைக்கும்போது உண்மையில் நீங்கள் எனது கைகள் தான் உங்களது கைகளுக்கு மேல் இருக்கின்றது என்று அல்லாஹ் கூறியிருந்தும் சஹாபாக்களுக்கு போதனை செய்தவாறு ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அருள் இல்லையென்றால் யாருடைய நற்செயல்களும் அவரை சுவர்க்கத்திற்கு கொண்டு செல்ல முடியாது என்று கூறினார்கள். இதைக் கேட்ட சஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களது நற்செயல்களும் உங்களை சுவர்க்கத்திற்கு கொண்டு செல்லாதா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தின் காரணமாகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் இருந்த பணிவின் காரணமாகவும் அவர்கள் இதற்கு என்ன பதில் கூறியுள்ளார்கள் என்று பாருங்கள்.

அல்லாஹ்வின் அருளும் அவனது கருணையும் என்னை சூழ்ந்து கொள்ளாமல் இருந்தால் நானும் சுவர்க்கத்திற்கு செல்ல முடியாது என்றுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதில் கூறினார்கள்.

இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய பணிவின் மிகச் சிறந்த உயர்வான முன்மாதிரியாகும். இதுதான் கர்வத்திற்கும், தற்பெருமைக்கும் எதிராக அவர்கள் செய்த போருக்கான மகத்தான அறிவிப்பாகும். அல்லாஹ்வின் அருளே என்னை சுவர்க்கத்திற்கு கொண்டு செல்லும். அப்படியிருக்கும்போது உலகின் எண்ணற்ற மறைவான ஷிர்க்கில் மூழ்கியிருக்கும் நீங்கள் என்னைப் போல ஏகத்துவத்தை புரிந்திருக்க முடியாது. நான் தொழுகைகளில் நிலைநாட்டியுள்ள அந்த உயர்வான தரத்தை நீங்கள் நிலைநாட்ட முடியாது. பிறகு நீங்கள் செய்துள்ள நன்மைகள் காரணமாக நீங்கள் எப்படி தற்பெருமை கொள்ள முடியும்? உங்களது நற்செயல்களின் காரணமாக நீங்கள் எப்படி தற்பெருமை கொள்ள முடியும்? என்பதையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இந்த பதில் மூலமாக நமக்கு உணர்த்தியுள்ளார்கள். நீங்கள் பணிவை மேற்கொள்ளுங்கள். அதில்தான் நீங்கள் எஞ்சியிருப்பது அடங்கியுள்ளது என்பதை அவர்கள் நமக்கு புரிய வைத்துள்ளார்கள். மேலும் இதில் தான் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் நாம் வைக்கின்ற அன்பின் இரகசியம் பொதிந்திருக்கின்றது. ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதனை செய்தவாறு இவ்வாறு கூறினார்கள். அல்லாஹ்வின் அடியார் ஒருவரை எந்த அளவு மன்னிக்கின்றாரோ அந்த அளவு அந்த அடியாரின் கண்ணியத்தை அதிகரிக்கும்படி செய்கின்றான். எந்த அளவு ஒருவர் பணிவையும் தாழ்மைக் குணத்தையும் மேற்கொண்டு நடப்பாரோ அல்லாஹ் அந்த அளவில் அவருக்கு உயர்வான தகுதியை வழங்குவான்.

எனவே, இந்த விஷயங்களை தன்னிடம் மேற்கொண்டவாறு அதில் உயர்வான தரத்தைப் பெறுவதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும்.

இங்கும் உலகின் பல இடங்களிலும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நிலவும் சண்டைகள் தொடர்பான முறையீடுகள் என்னிடம் வந்து கொண்டிருக்கின்றது. இதில் ஆண்களிடமும் குறை இருக்கின்றது. பெண்களிடமும் குறை இருக்கின்றது. ஒரு மூஃமினிடம் இருக்க வேண்டிய அந்த சகிப்புத்தன்மை அந்த ஆண்களிடம் இல்லை. பெண்களும் சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ளாமல் இருக்கின்றாரகள். இதற்கு முன்னரும் இது தொடர்பாக பல முறை நான் கவனமூட்டியிருக்கின்றேன். இதில் பெரும்பாலும் குற்றம் இழைப்பவர்களாக ஆண்கள் இருந்தாலும் சில பிரச்சனைகளில் பெண்கள் முழுக்க முழுக்க குற்றம் புரிபவர்களாக இருக்கின்றார்கள். இரு தரப்பிலும் குற்றங்கள் இருப்பதால் காழ்ப்புணர்ச்சி, பகைமை உருவாகிறது. இரு தரப்பில் உள்ளவர்களும் தங்களது உணர்வுகளை கட்டுப்படுத்தியவாறு உள்ளத்தில் தக்வாவை நிலைபெறச் செய்யக்கூடியவர்களாக இருந்தால் பிறகு இந்த பிரச்சனைகள் ஒருபோதும் உருவாகாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள அப்படிப்பட்ட மக்களுக்கு போதனை செய்தவாறு கூறியது என்னவென்றால் உங்கள் இருவருள் ஒருவருக்கு மற்றவர் மீதுள்ள குறைகள்தான் தென்படுகின்றதென்றால் உங்களுக்கு பிடித்தமான பல நல்ல விஷயங்களையும் உங்களுள் ஒருவர்

மற்றவரிடம் பார்க்க முடியும். முழுக்க முழுக்க குறைகள் மட்டும்தான் ஒருவரிடம் இருக்கின்றது என்று யாரும் கூற முடியாது. நீங்கள் அந்த நல்ல விஷயங்களை உங்கள் கண் முன் நிறுத்தினால், மேலும் தியாகம் செய்ய வேண்டும் என்ற அம்சத்தைப் பேணி நடந்தால் அதனால் ஒருவருக்கு மற்றவரிடம் அன்பு, நேசம், சமாதானம் உருவாக முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட தனது மனைவிமார்களிடம் நல்ல முறையில் பரிமாறுகின்ற வேறு எவரும் இல்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மனைவிமார்கள் சாட்சி பகர்ந்துள்ளனர். எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதனைகள் செய்யும் போது போதனைகள் செய்து விட்டு இருந்து விடாமல் அவற்றை தனது முன்மாதிரியில் செயல்படுத்திக் காட்டி அதை நிரூபித்துள்ளார்கள்.

இந்த நாட்களில் இந்த ஆன்மீக சூழலானது உங்கள் உள்ளத்தில் ஏற்படுத்துகின்ற சிறந்த தாக்கத்திலிருந்து பலன் பெற்றவாறு நீங்கள் உங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். உங்களது தொழுகைகள் பற்றி நீங்கள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். உங்கள் ஒழுக்கங்கள் தொடர்பாகவும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எவ்வகையிலும் ஒருவர் மற்றவரது உரிமைகளை பறிப்பது தொடர்பாக ஒருபோதும் நினைத்துக் கூட பார்க்க வேண்டாம். ஒரு சமுதாயத்தில் இருந்தவாறு நாம் கடைபிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்களை நமது உள்ளத்தில் இறைவனைப் பற்றிய உண்மையான அச்சம் இல்லாத வரை நம்மால் கடைபிடிக்க முடியாது என்பதை எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். தான் என்ற அகங்காரத்திலிருந்தும் எல்லாவிதமான தற்பெருமையிலிருந்தும் நமது உள்ளம் விலகாத வரை இந்த நல்லொழுக்கங்களை நாம் பேண முடியாது. எவரிடம் இந்த விஷயங்கள் உருவாகிவிடுமோ அப்படிப்பட்ட நபர் பிறகு எல்லா விதமான தீமைகளிலிருந்தும் விலகி தூய்மையடைந்து விடுவார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவருக்கு உலகத்தின் செல்வங்கள் கிடைத்திருக்கின்றதோ அவர் நற்பாக்கியம் பெற்றவரல்ல. அவர் இந்த செல்வத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான ஆபத்துகளுக்கும் துன்பங்களுக்கும் இரையாகி விடலாம். மாறாக, ஈமானின் செல்வம் யாருக்கு கிடைத்திருக்கின்றதோ அவர்தான் நற்பாக்கியம் பெற்றவராக இருக்கின்றார். அவர் இறைவனது வெறுப்பிற்கும் அவனது கோபத்திற்கும் அஞ்சியவாறு இருப்பார். எப்போதும் அவர் தன்னை தனது நஃப்ஸின் தாக்குதல்களிலிருந்தும் ஷய்த்தானின் தாக்குதல்களில் இருந்தும் காப்பாற்ற வேண்டும். ஏனென்றால், இவ்வாறு இருந்தால்தான் இறைவனின் திருப்தியைப் அவரால் பெற முடியும். ஆனால், இவை தானாக கிடைத்து விடும் என்று கருத வேண்டாம். இதற்காக நீங்கள் தொழுகைகளில் துஆ செய்ய வேண்டியது அவசியமாகும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். இறைவன் உங்களிடம் திருப்தியடைய துஆ செய்யுங்கள். பாவங்களால் நிரம்பியுள்ள வாழ்க்கையிலிருந்து நீங்கள் இரட்சிப்பை பெறுவதற்காக அவன் உங்களுக்கு நற்பாக்கியத்தை வழங்க துஆ செய்யுங்கள். அல்லாஹ் நல்வாய்ப்பு வழங்காத வரையிலும் தனது அருளை வழங்காத வரையிலும் பாவங்களிலிருந்து தப்பிப்பது சாத்தியமற்ற ஒன்றாகும். இந்த நல்வாய்ப்பும் அருளும் துஆ மூலமாகவே கிடைக்கின்றது. இதற்காக தொழுகைகளில் அல்லாஹ்வே! பாவம் என்று அழைக்கப்படுகின்ற அந்த எல்லா செயல்களிலிருந்தும் உனது விருப்பத்திற்கும் உனது வழிகாட்டலுக்கும் மாற்றமான செயல்களிலிருந்து நீ எங்களை பாதுகாப்பாயாக! இந்த பாவங்களின் விளைவாக எங்களுக்கு வருகின்ற எல்லா விதமான துக்கத்திலிருந்தும் கஷ்டத்திலிருந்தும் சோதனைகளிலிருந்தும் நீ எங்களை பாதுகாப்பாயாக! எங்களை உண்மையான ஈமானில் நிலைநிற்கச் செய்வானாக என்று துஆ செய்ய வேண்டும்.

**பிறகு பல்வேறு வகையான பாவங்களைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“பல பாவங்களும் ஒழுக்கத்துடன் தொடர்புடையாக இருக்கின்றது. கோபம், பகைமை, வெளிவேஷம், கர்வம், பொறாமை போன்றவை இதில் அடங்கும். இவை எல்லாமே தீய ஒழுக்கங்களாகும். இவை மனிதனை நரகம் வரை கொண்டு செல்கின்றது. நாம் பெரும் பாவங்களைச் செய்வதில்லை என்பதில் மட்டும் நமக்கு பெருமை இருக்க கூடாது என்பதை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். மாறாக சாதாரண தீய ஒழுக்கங்களும் பாவமாகும்.”

திருக்குர்ஆனின் கட்டளைக்கு ஏற்ப ஒரு மூஃமின் பாவங்களிலிருந்து தப்பிப்பதுடன் நன்மைகளில் முன்னேறவும் முயற்சி செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"மனிதன் பாவங்களிலிருந்து தப்பித்தவாறு நன்மைகளை செய்ய வேண்டும். அல்லாஹ்வை வணங்குவதுடன் அவனது கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அவர் பாவங்களிலிருந்து தப்பித்து இறைவனை வணங்கும்போது அவரது உள்ளம் அருள்களால் நிறைந்து விடும்."

நம்மில் ஒவ்வொருவரும் இந்த மாநாட்டில் இந்த நோக்கத்தை நிறைவு செய்யக் கூடியவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக! ஜமாஅத் மீது பொழிந்து கொண்டிருக்கின்ற இறை அருள்களின் மழைகள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்க இறைவன் அளித்துள்ள வாக்குறுதிக்கு ஏற்ப கிடைக்க இருக்கும் வெற்றிகள் ஆகியவற்றிலிருந்தும் ஒவ்வொரு அஹ்மதியும் பலன்பெற அல்லாஹ் அருள் செய்வானாக. கடந்த வருடம் பெண்கள் இருந்த கூடாரத்தில் கூச்சல் அதிகமாக இருந்ததால் பெண்களுக்கு மாநாட்டில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டது. பிறகு பெண்களிடமிருந்து தொடர்ந்து கடிதங்களும் மன்னிப்புக்கான விண்ணப்பமும் வந்ததன் காரணமாக இந்த மாநாட்டின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு அந்த தடை நாம் அகற்றி விட்டோம்.

இந்த வருடம் பெண்கள் மாநாடு நடக்கின்றது. இனி மாநாட்டின் முழு நிகழ்ச்சிகளையும் அமைதியுடனும் கவனத்துடனும் கேட்போம் என்று நீங்கள் செய்த வாக்குறுதியை எப்போதும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஜெர்மனியிலுள்ள லஜ்னாக்களிடமிருந்து பாடம் படித்தவாறு உலகிலுள்ள பல லஜ்னா அமைப்புகளும் அமைதியுடன் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வோம் என வாக்குறுதியளித்து அதற்கேற்ப நடந்துள்ளார்கள். அப்போது இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவது உங்கள கடமையாகும். கானாவைப் பற்றி நான் ஏற்கனவே கூறியிருந்தேன். அங்கு மாநாட்டில் 50,000 க்கும் அதிகமான பெண்கள் கலந்து கொண்டார்கள். ஃபஜ்ர் தொழுகையில் கூட 25,000 அல்லது 30,000 பெண்கள் கலந்து கொண்டார்கள். சில பெண்களுடன் அவர்களது பிள்ளைகளும் இருந்தார்கள். ஆனால் ஒரு சிறு சத்தம்கூட அங்கு வரவில்லை. தொழுகையின் போதும் ஜுமுஆ குத்பா நடைபெறும் போதும் சொற்பொழிவுகள் நடைபெற்ற போதும் கடுமையான வெப்பத்தில் அமர்ந்திருந்தும்கூட சிறுவர்கள், சிறுமிகள், குழந்தைகள் ஆகியோரை தனியாக அமர வைப்பதற்கான ஏற்பாடு இல்லாமல் இருந்தும் எந்த இடத்திலிருந்தும் எந்த சத்தமும் வரவில்லை. முழுமையான அமைதியுடன் எல்லாரும் முழு நிகழ்ச்சிகளையும் கேட்டார்கள். பார்த்தார்கள்.

ஜமாஅத்தில் உங்களுக்கு பின்னால் வந்து இணைந்த சமுதாயங்கள் இப்படிப்பட்ட உயர்வான முன்மாதிரியை நிலைநாட்டியிருக்கும்போது அவர்கள் உங்களைவிட முன்னேறிச் சென்று விடுவார்கள். அவ்வாறு முன்னேறி செல்வது அவர்களது உரிமையாகும்.

எனவே, இந்த விஷயங்களை மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். எல்லா நிகழச்சிகளையும் மிகுந்த பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் நீங்கள் கேட்க வேண்டும். கூறப்பட்டவற்றை நீங்கள் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக அவற்றை நீங்கள் கேட்க வேண்டும். அல்லாஹ் எல்லாருக்கும் கிலாஃபத்தின் அருட்கொடையில் இருந்து முழுமையான பலனை அடைவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT MANNHEIM, GERMANY**
**ON 22.08.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**